# மார்ச் – 05 – செவ்வாய்

## தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் கடவுள்தாம் அருளும் மீட்பைக் கண்டடைவர்'' (தி.பா.50:23)

## முதல் வாசகம் : சீராக்கின் ஞானம் 35 : 1 – 12

திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பது பல காணிக்கைகளைக் கொடுப்பதற்கு ஈடாகும். கட்டளைகளைக் கருத்தில் கொள்வது நல்லுறவுப் பலி செலுத்துவதற்கு ஒப்பாகும்.அன்புக்குக் கைம்மாறு செய்வது மாவுப் படையல் அளிப்பதற்கு இணையாகும். தருமம் செய்வது நன்றிப்பலி செலுத்துவதாகும்.தீச்செயலை விட்டுவிடுதல் ஆண்டவருக்கு விருப்பமானது அநீதியைக் கைவிடுதல் பாவக் கழுவாய்ப் பலியாகும்.ஆண்டவர் திருமுன் வெறுங்கையோடு வராதே. கட்டளையை நிறைவேற்றவே பலிகளையெல்லாம் செலுத்து.நீதிமான்கள் காணிக்கைகளைச் செலுத்தும்போது பலிபீடத்தில் கொழுப்பு வழிந்தோட, உன்னத இறைவன் திருமுன் நறுமணம் எழுகிறது. நீதிமான்களின் பலி ஏற்றுக்கொள்ளத்தக்கது. அதன் நினைவு என்றும் நீங்காது.ஆண்டவரைத் தாராளமாய் மாட்சிமைப்படுத்து உன் உழைப்பின் முதற்கனிகளைக் கொடுப்பதில் கணக்குப் பார்க்காதே. கொடை வழங்கும் போதெல்லாம் முகமலர்ச்சியோடு கொடு பத்திலொரு பங்கை மகிழ்ச்சியோடு கடவுளுக்கு உரித்தாக்கு.உன்னத இறைவன் உனக்குக் கொடுத்திருப்பதற்கு ஏற்ப நீயும் அவருக்குக் கொடு உன்னால் முடிந்த அளவுக்குத் தாராளமாய்க் கொடு.ஆண்டவரே கைம்மாறு செய்பவர் ஏழு மடங்கு உனக்குத் திருப்பித் தருபவர்.ஆண்டவருக்குக் கையூட்டுக் கொடுக்க எண்ணாதே் அவர் அதை ஏற்கமாட்டார். அநீத பலியில் நம்பிக்கை வைக்காதே.ஆண்டவர் நடுவராய் இருக்கிறார் அவரிடம் ஒருதலைச் சார்பு என்பதே கிடையாது.

**பதில்பாடல் :** தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் கடவுளின் மீட்பைக் கண்டடைவர்.

## நற்செய்தி : மாற்கு 10 : 28 - 31

அக்காலத்தில், பேதுரு அவரிடம், ”பாரும், நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றிய வர்களாயிற்றே” என்று சொன்னார். அதற்கு இயேசு, ”உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் வீடுகளையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ, தாயையோ, தந்தையையோ, பிள்ளைகளையோ, நிலபுலன்களையோ விட்டுவிட்ட எவரும் இம்மையில் நூறுமடங்காக வீடுகளையும் சகோதரர்களையும் சகோதரிகளையும் தாயையும் நிலபுலன்களை யும், இவற்றோடுகூட இன்னல்களையும் மறுமையில் நிலை வாழ்வையும் பெறாமல் போகார். முதன்மையானோர் பலர் கடைசி ஆவர் கடைசியானோர் முதன்மை ஆவர்” என்றார்.

**தியானம்:** ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகத்தில் நல்வாழ்க்கை வாழ வேண்டுமென்று நினைக்கின்றான். குறிப்பாக கடவுளுக்கு தம்மை அர்ப்பணித்து வாழும் பொழுது, அவர்கள் பலரின் எதிர்ப்பையும் ஏன் வெறுப்பையுமே பெறவேண்டியிருக்கின்றது. ஆதித் திருச்சபையில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பலா் தங்கள் இரத்த உறவுகளைப் பிரிந்தனர். எனினும் நம்பிக்கை கொண்டோர் குழுவில் இணைந்த பிறகு அவர்கள் புதிய உறவுகளையும், நிறை மகிழ்ச்சிளையும் பெற்றுக் கொண்டனர். இன்றைய முதல் வாசகத்தில் அன்புக்கு கைமாறு செய்வது, தருமம் செய்வது, தீச்செயலை விட்டு விடுவது ஆகியவை ஆண்டவருக்கு விருப்பமானவை என்கின்றார் சீராக். அவ்வாறே திருப்பாடலிலும் “தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் கடவுள்தாம் அருளும் மீட்பைக் கண்டடைவர். (தி.பா.50:23) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது அன்றாட வாழ்வில் மாசற்றவர்களாக, இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நாம் பெற்றுக்கொண்டுள்ள எமது கிறிஸ்தவ வாழ்க்கை அறைகூவலை, உறுதி மிக்க உள்ளத்தோடு ஏற்று வாழ்வதே நாம் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவ வாழ்வாகும்.